யுடனும், ஃஸோனல் கவுன்சிலின் ஒத்துழைப்புடனும் இரு மாநிலங்களுக்கும் பயன்தரத்தக்க வகையில் இது சுமுகமாக முடியும் என்ற காரணத்தினுல்தான் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன் : நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வரும் இந்தத் திட்டத்திற்கு எஸ்டிமேட் போன்ற இதரப் புள்ளிவிவரங்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டுவிட்டனவா ? பேச்சுவார்த்தை முடியும் கட்டத்திற்கு வந்துவிட்டது என்ற நம்பிக்கை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இருசாராரும் தங்கள் தங்கள் புள்ளிவிவரங்களை வைத்து இருக்கிருர்கள். இதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. பேச்சுவார்த்தை சுமுகமாக முடிந்து, இருசாராருக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டு விடுவதற்குத்தான் மத்திய அரசு உதவி புரிய வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டவுடனே மின்சாரக் கட்டணத்தைக் குறைக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திட்டமே முடியாத நிலையில் இதைப்பற்றிச் சொல்வதற்கில்லை. அனல் மின்சாரத் திட்டத்தில்தான் செலவு அதிகம். நீர் மின்சாரத் திட்டத்தில் உற்பத்திச் செலவு குறைவுதான். ஆகவேதான் இதை அரசு வற்புறுத்தி வருகிறது.

மதுரா நதியின் குறுக்கே அணை

* 108 வினு—**திரு. கரு. சிமைச்சாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விணுக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மதுரை மாவட்டம், அய்யம்பாளையத்தில் மதுரா நதியின் குறுக்கே ஒரு அணைக்கட்ட உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றுல், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) and (இ) இச் செயற்குறிப்பு ஆய்விலுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த அணைக்கட்டுத் திட்டத்தைப் பற்றிய விவரத்தை—எவ்வளவு செலவாகும், எத்தனை ஏக்கராக்கள் பயன் படும்—என்பதனைத் தெரிவிப்பார்களா—

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இந்த அணைக்கட்டுத் திட்டம் நான் ஏற்கனவே இந்த அவையில் தெரிவித்த ஆய்வு செய்யப்பட்ட பத்துத் திட்டங்களில் ஒன்றுகும். இப்போது ஆய்வு செய்யப்பட்ட வகையில் இந்தத் திட்டத்திற்கு 62 லட்சம் ரூபாய் ஆகும். இதற்காக பீலிக்கரடு என்ற இடத்தில் நில ஆர்ஜிதம் செய்கிற செலவையும் சேர்த்துப் பார்த்தால் 86 லட்சம் ரூபாய் ஆகும். ஆயினும் நில ஆர்ஜிதத்திற்கு அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிருர்கள். ஆகவே செதில்பாறை என்ற இடத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்ற யோசனை இருக்கிறது.

Dr. H. V. HANDE : Sir, what is the acreage that may come under this project for irrigation purposes and also what is the rough cost for irrigating each acre and whether there is any possibility of this project being taken up in another year or two ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : புதிதாகப் பாசனம் அளிக்கப்பட இருக்கும் பரப்பு 2,250 ஏக்கரா. பாசன உறுதி அளிக்கப்படுவது தற் போதுள்ள பகுதி 2,283 ஏக்கரா. ஏக்கரா ஒன்றுக்கு ஆகும் செலவு 2,755 ரூபாய். உற்பத்திச் செலவு டன் ஒன்றுக்கு 4,419 ரூபாய். அநேகமாக இந்தத்திட்ட வேலை துவங்கப்படும் என்று கருதப்படுகிறது.